# நிற்க அதற்குத் தக

## கவியரங்கக் கவிதைகள்



சோ. தேவராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிற்க அதற்குத் தக

கவியரங்க கவிதைகள்

சோ. தேவராஜா

கலாலயம் பதிப்பகம்
இல. 68, நீதிமன்ற வீதி,
மல்லாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Book Tittie: Nitka Athatkuth thaka
subjust : 'collection of Poems of Poetry forum
Author: S. Thevarajah
Pupilsh by : KALA LAYAM PATHIPPAGAM
No. 68, Court Road,
Mallagam, Srilanka
Puplished No: 09
Pages : vi+ 45
Size : semy
First edition : November, 2023
Cover Design : S.T.Anujan
Price : Rs 300/=
Printed by : J.S.Printers
Sillalai Road,
Pandatheruppu
I S B N - 978-624-93177-2-7

நூல் பெயர்: நிற்க அதற்குத் தக
பொருள் : கவியரங்கக் கவிதைகள்
நூலாசிரியர்: சோ. தேவராஜா
வெளியீடு : கலா லயம் பதிப்பகம்
இல. 68, நீதிமன்ற வீதி,
மல்லாகம், இலங்கை
வெளியீட்டு இல: 09
பக்கங்கள் : vii+ 45
நூலின் அளவு : செமி
பதிப்பாண்டு : நொவம்பர், 2023
அட்டை வடிவமைப்பு : எஸ். ரி. அனுஜன்
விலை : ரூபா 300/=
அச்சகம் : ஜே. எஸ். பிறின்றேஸ்,
சில்லாலை வீதி,
பண்டத்தரிப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**சமர்ப்பணம்**

லச்சுமிக் குஞ்சாச்சிக்கு

(இலட்சுமி நவரத்தினம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளடக்கம்


| | |
|---|---|
| பதிப்புரை | v |
| என்னுரை | vi |
| நீதிக்கு நெஞ்சோ நிகர்! | 01 |
| அரசியல் மனிதர் எழுந்து நடப்பார் | 05 |
| இருஞ்சற்றுப் பொறும் எல்லாஞ் சரிவரும் | 10 |
| 'நிற்க அதற்குத் தக' | 14 |
| 'எதை எடுத்துச் சொல்ல...' | 22 |
| போகாத ஊரும் பொய்யான வழியும் | 28 |
| காணி நிலம் வேண்டும் | 32 |
| யாழ்ப்பாண மாப்பிளையே! | 36 |
| நீலம்பாரிச்சபடி இலங்கைத்தீவு... | 39 |
| துயரப் பாக்களும் உயரப் பாவும் | 42 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

கவிஞர் சோ. தேவராஜா பங்குபற்றிய பத்துக் கவியரங்க கவிதைகள் இந்நூலில் பதிக்கப்படுகின்றன. இக்கவியரங்குகள் கொழும்பு, யாழ்ப்பாணம், மலையகம் எனப் பல இடங்களிலும் நடைபெற்றுள்ளன.

ஈழத்தின் பிரபல கவிஞர்கள் பலரின் நூல்களை பதிப்பித்து வெளியிட்டதில் தேசிய கலை இலக்கியப் பேரவை முன்னணிச் செயற்பாட்டாளராக விளங்கிய தேவராஜா அவர்களின் கவிதை நூலினை வெளியிடுவது எமது காலத்தின் கடனாகும்.

இந்நூல் இவரது மூன்றாவது கவிதை நூலாகும். 'ஆச்சி' 'கூவிப்பிதற்றலன்றி' ஆகிய இரு நூல்களைத் தொடர்ந்து வெளிவருகின்றது.

கலா லயம் பதிப்பகம் ஏற்கனவே சி. சிவசேகரத்தின் 'ஆச்சியின் கொண்டையூசிகள்', கவிதை நூலினையும், சோ. தேவராஜாவின் 'கூவிப்பிதற்றலன்றி' என்ற கவிதை நூலினையும் தொடர்ந்து வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

வாசகர்களின் விமர்சனங்களை வரவேற்கிறோம்

கலா லயம் பதிப்பகம்
68, நீதிமன்ற வீதி,
மல்லாகம்

பாவலர் அழ. பகீரதன்
2023.11.02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

பாரதியின் 'கூவிப்பிதற்றலன்றி' என்ற வாசகத்திலும் வள்ளுவரின் 'நிற்க அதற்குத் தக' என்ற வசீகரத்திலும் எனது கவியரங்கக் கவிதைகளைப் பதிப்பித்து வெளியிட்டு வைக்கும் கலா லயம் பதிப்பகத்திற்கும் பதிப்பாளர் பாவலர் அழ. பகீரதன் அவர்களுக்கும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

புத்தகப் பண்பாட்டுப் பேரவையின் இயங்குனர்களான ச. சஜீவன், ச. தனுஜன், ச. அனுஜன், சு. கர்ணிகா, பா. கஜீபா ஆகிய இளைஞர்களுக்கும் எனது பாராட்டுக்கள்.

இக்கவியரங்குகளில் பங்கு பற்றிய தோழர்கள், நண்பர்கள் நன்றிக் குரியவர்கள்.

இந்நூலினை எனது இளமைக்காலத்திலிருந்து தனது இறுதிக்காலம் வரை அன்பு, பாசம், உறவு, கருணை என்பவற்றின் அர்த்தத்தை எனக்குப் புரியவைத்த லச்சுமிக் குஞ்சாச்சி என நாம் வாஞ்சையோடு அழைக்கும் அமரர் நவரத்தினம் இலட்சுமி அவர்களுக்கு காணிக்கையாக சமர்ப்பிக்கிறேன்.


சோ. தேவராஜா

*2023.11.02*

அரசடி வீதி,

பண்டத்தரிப்பு

*TP: 077 885 1989*

*mail: sothevarajah@gmail.com*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01

# நீதிக்கு நெஞ்சோ நீசர்!

கேட்டறியா தலைப்பிது கேட்டறிய வேண்டியது
கண்டறியாத் தலைப்பிது கண்டறிய வேண்டியது
கண்ட நிண்ட காட்சி எல்லாம்
கொண்டதே கோலமெனும் கொள்கையதே புனிதமதாய்
உள்ளதே உலகமயம் நாமெல்லாம் அதன் வயம்...
பேதை நெஞ்சே! ஊன் இதயமெலாம் அதன் லயம்...

நெஞ்சே நீ என் நெஞ்சமோ? நான் நஞ்சானது உன்னாலோ
பிஞ்சானதுமுதல் நீ நீதானோ?
கொஞ்சி விளையாடியதும்– பின்
விஞ்சி விடின் வினையானதுவும்
அஞ்சியஞ்சி சாவதும்
கெஞ்சி கைபிசைந்து இரப்பதுவும்– பின் இறப்பதுவும்
நெஞ்சே நீ என் நெஞ்சமோ?

பேதை நெஞ்சே! என்னைப் பேயனாய், விசரனாய் ஆக்கினைகள் செய்தாயே!
நெஞ்சே நீ என் இதயமென்றால்
கொலஸ்ரோலை ஏன் கொண்டு வந்தாய்?
ஏன்தான் பிறசரை விருந்தாக்கி விழுங்கு குளிசை என்றாய்...
நெஞ்சே நீ என் சிந்தை என்றால் ஏன்
கொன்றாய் என் அறிவுக் கொழுந்தை
ஆசைக்கு பூசை வைத்து பேராசையாக்கினாயே
பேராசை முடிவின்றி பெரும் கவலையானதுவே
பேராசை பாத்தி கட்டி
நன்றி கெட்டு இன்சொல் பிடுங்கி
சிரிப்பதை அரிந்து பயப் பயிரை நட்டு பழிக்குப் பழியெனும்
ஈகோ நீரிறைத்து உறவை எரித்து நட்பை உழக்கி மிதித்து
காதலனைக் கொன்று கயமை வேர் நாட்டி
பிரமையில் வாழவிட்டாய்
இங்கிலீஸை அறிவு என்றாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிசரிடம் இருப்பதற்கெல்லாம்
மரியாதையேதென்றாய்...

மனிசரிடமெல்லாம் காசே பெரிதென்றாய்
மனிசரின் அன்பும், கருணையும், இரக்கமும்,
பண்பும், அறமும், மறமும், இன்சொல்லும்
இன்முகமும் இ:தெல்லாம் இருப்பவன்
இயலாத பேதையென்றாய்

:பைவ்ஸ்ரார் ஹோட்டலே லைவ் ஸ்ரைல் என்றாய்
உடுப்புக்கு நோ லிமிட் என்றாய்
படிப்பும் கைகால் உழைப்பும் பயனில்லை– உயிர்
துடிப்பும் பொதுநலன் விழிப்பும் வீண் என்றாய்– நாட்டில்
இருப்பும் ஆண்பெண் இணைப்பும்
பிள்ளை பிறப்பும் பேய்வேலையென்றாய்

வங்கி இருப்பும் வட்டி வரவும்
பங்குச் சந்தையில் பம்பரமாவதுமே
எங்கும் நிலை என்றும் நீதி என்றாய்
பேதை நெஞ்சே நிதியே உன் நீதி என்றாய்

கல்லானாயினும் கைப்பொருள் ஒன்றுண்டாயின்
எல்லாரும் சென்றங்கு எதிர் கொள்வர்
நீதி என்றாய்!
இல்லானை இல்லாள் வேண்டாள்
ஈன்றெடுத்த தாயும் வேண்டாள்
செல்லாது அவன் வாய்சொல்லே

நெஞ்சே நீயேன் எனக்குரைத்தாய்
கல்லானுக்கு காசு வந்ததும் கடவுள் என்றான்
ஊருக்கு முப்பது கோவில் என்றான்
மீளக் குடியமரக் கூரைக்கு ஓலையில்லை
கொட்டில் கப்புக்கு மரமில்லை
பத்தை வெட்டக் கத்தியில்லை
நுளம்பால் பெருந் தொல்லை
டெங்குடன் வாழ சபிக்கப்பட்டோமே!!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சுக்கு நீதி சொன்ன கலைஞர் ரீ.வீயில் மானாடுது மயிலாடுது
மனிசன் அதில் மூழ்குகிறான்
கணவனைக்கொல்ல வழி, மனைவியைக் கலைப்பது,
பிள்ளையைப் பிரிவது, பெற்றோரை விரட்டுவது,
..
இலட்சத்து ஆயிரம் கோடிகள் தந்தால்
தமிழும் மொழியும் வியாபாரம் ஆதலால்
விடுதலையிழந்து வீரமும் கெட்டு
துணிவும் நம்பிக்கையும் புதைந்தழிந்து
பணிவும் அடக்கமும் பயமும் கவலையும்
பக்தியும் ஒடுக்கமும் ஒதுக்கமும்
ஓரமாய் விளிம்பில் விசும்புவதும்
மனிசனின் நெஞ்சாய்
மனிதனின் நீதியாய் நிந்தையில்
நிம்மதியெங்கே!
நிகராவது எப்போ?
ஏழையின் நெஞ்சும் நீதியும் – காசு
காசு உள்ளவனின் நெஞ்சும் நிதியும்
ஆருக்...
....
நெஞ்சே நீ எங்கே நான் அங்கே
என் மெய்யின் பொய்யே என் நெஞ்சே
நீ பொய்மையாய் போனது ஏன் நெஞ்சே?
எனக்காய் இல்லை என் நெஞ்சே
எவர்க்காய் என்னுடன் இருக்கிறாய் என் நெஞ்சே!

ஏனோ தானோ என்று என்னுடன்
இருந்து காலம் களிக்கிறாய்...
நீவேறு நான்வேறு
அன்போடும் நட்போடும்
கருணை காட்டும் காதல் காசாகும்
நெஞ்சே எனக்கு நீதி இல்லை
உனக்கு நீ சொந்தமில்லை
உனக்கு நான் உறவுமில்லை
உன்னையும் என்னையும் பிரித்தறியேன்
நினைவு இல்லை மனமும் இல்லை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ உன் சாட்சியும் இல்லை
... உறவும்... செலவுமே
பந்தமோ பாசமாய் ஆனதோ
'நெடும் பயணம் ஓயும் வரை– நெஞ்சே
உனக்கோய்வில்லை'
அந் நன் நாளில் கம்பசில்
கவியரங்கில் பாடி பரிசு தர
....
....
...
இப்போ நீ எங்கே! நான் இங்கே
இதயமிழந்த மனிதனாய் இயக்கமில்லாமல் பேதையாய்
ஆனாயோ என் நெஞ்சே!

அஞ்சிய நெஞ்சினர்க்கு சதா மரணம் – அஞ்சாத நெஞ்சத்து
ஆடவர்க்கு ஒரு மரணம் என்றாய்
மண்ணாங்கட்டியும் மானமும் ரோசமும் என்றாய்
சுதந்திரம் உனக்கென்றாய்– அதுவே உன்
ஈகோ என்றாய்
சமத்துவம்
...
...
நீயெங்கே, உன் நீதி எங்கே
நீ வேறு நீதி வேறு...
... ... ...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02

# அரசியல் மனிதர் எழுந்து நடப்பார்

உறுதி குலையாத உள்ளத்து நினைவுகளாக
பொறுதியோடு பல தோழர் தம் உழைப்பில்
கனதியாயொரு புத்தகந்தன்னை
நினைவுப் படையலாய்– தோழர் சிவ
ஞானம் புதையலாய்
உலகினுக்கே வழங்கும்
உன்னத நிகழ்வில்– கவிதாஞ்சலியாய்
உலவிடக் கவி எனக்கு
உதவிட வந்துள்ள
உங்களனைவர்க்குந்
தாழ்த்தினேன் சிரம் பணிந்து!

அரசியல் மனிதர் எழுந்து நடப்பார்
ஆதலினால் நான் கவியெனப் படைப்பேன்
பொருள் மீது அவா இல்லார்
புகழ் பெறும் அடாத்தற்றார்
தலை தானெனும் தன்முனைப்பிலார்
கைகளுண்டெனும் உழைப்புத்தான் மிக்கார்!

அரங்கை அமைப்பார் ஆட்கள் திரட்டுவார்
தரங்கெடாது தக்கபடி செயற்படுவார்– மிகப்
பொறுப்பெடுப்பார் – மக்கள் துணைக்கழைப்பார்
தன் முகங் காட்டார்
தானாய் எல்லாம் சரியாய் நடக்கும்
கூட்டம் கூடும் ஒலிபெருக்கி பாடும்
பேச்சு முழங்கும் கரங்கள் ஒலிக்கும்
குசினியிலும் பொறுப்பாய் இருப்பார்
ஆயத்தம் அனைத்தும் அவரேயானார்
ஆனால் அவர் தெரியார்!

இளைஞர் கூடுவர் சூரன்போர் நடக்கும்
நெல்லியடி கலக்கும் நெடிதுயர் பனையென
நிமிரும் நிலைக்கும்!
பேர் தெரியாப் பணிகள் பலப்பல தொடரும்
அவருக்கு அனைவரையும் தெரியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறருக்கு அவரைத் தெரியாது
அவர் யார்?
பொதுவுடைமைத் தொண்டர்
தோழர் சிவஞானமென்பவதவர் பேர்!

இப்படி மனிதர் எத்தனை பேரிருப்பார்
அரசியல் மனிதர் எப்போது அவதரிப்பர்
அரசியல் என்றதும்
முகஞ்சுருங்குவதைச் சிலரில் பார்க்கிறேன்!
ஏனென்றால் எல்லோரும்
பாராளுமன்றம் படியேறுதலே
சொத்துடைய அரசியல் சொகுசு எல்லாம் என்று
அத்தனையும் வெறுத்திருப்பார்– மிகப் பொறுத்திருப்பார்

ஆளும் அரசியல் சொத்துடையார்க் கென்றானதாய்
வாழும் மக்கள் அரசியல் பாதை வேறுளதாய்
சொல்லும் செயலும் ஒன்றெனவொழுகும்
பல்லுயிரோடு பயின்று வாழும்
வெல்லுதற்கு உலகுண்டென நம்பும்
அரசியல் மனிதர் வேறு வேறு – தோழர்
சிவஞானம் எனப் பல பேருளார் நன்று!

சொத்துடைச் சொகுசரசியலார் செயல் அரிகண்டம்
அருவருப்பு அடாவடித்தனம் அராஜகம் அதிகாரம்
ஆணவம் ஆடம்பரம் அத்தனையினதும்
மொத்தமாய்த் தெரிவதிலேதான்
எத்தனை துரோகம், கழுத்தறுப்பு
காட்டிக்கொடுப்பு
கூடியிருந்தும் குழிபறிப்பு
கண்டதும் பல்லிழிப்பு கண்டு மறைந்ததும்
பின்னால் பரிகசிப்பு!
எத்தனை அரசியல்
இத்தரையில் கண்டுவிட்டோம்!
இதுவரை பொறுத்துவிட்டோம்!

தலைவரெனில் மக்களைக் காணாதிருத்தல்
கண்டு விட்டால் தலையாட்டல் கைகுலுக்கல்
கண் சிமிட்டல் ஏதுமின்றி தலைதிருப்பல் கண்கள் முளிசிச் சிரிக்க மறுத்தல்
இப்படியே அப்பால் அடி நகர்ந்து சென்றதும்– உள்ளறுத்து ஊடுருவி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருப்படாதவையெவையோ அத்தனையும்
செய்வார்! கடைவிரிப்பார்! யார் எவர்?

இவையெல்லாம் போயகல வந்தருளி
இன்னொரு தோழராய் எழுந்தருளி
இன்முகத்தராய் காண்பதற்கெளியராய்
சரியை, கிரியையெனக் கட்சிக் கடன்தெரிந்து
யோகம்தன்னை முடித்து– மணம் முடித்து
போக வாழ்வதில் பொதுவுடைமை தாம் படைக்கும்
ஞானம் பெறு தோழர் சிவஞானம்
வாழ்வார், வாழ்வார், வாழ்வார் என்றும்!

உலகக்கிராமமெனும் மேற்குலக ஒற்றைவழிப்
பயணத்தின்– அந்நிய மோகத்தின் அடிமை விலங்கொடிக்கும்
போராளி எங்கள் சிவஞானமவர்க்குப்
புத்தகங்கள் என்றால் மிகப் புழுகந்தானவர்க்கு!
மகரகமைக் கட்டிலில் படுத்திருந்த போதும்
சிவசேகரம் புத்தகம் முதல் கைலாசபதி கேசவன்
என்றெமதெழுத்தர்கள் எழுதியதைத் தாருங்கோவென
கண்டதும் கேட்டதை நாமினிக் கேட்போமோ?
என்றும் வாழ்வார் எங்களோடு இணைந்து!

தோழர்கள் சிவராசா நாகேந்திரம் பத்தண்ணா
ராசு, குணேந்தி, ஜெகநாதன், நாகலிங்கம் எனப் பெரும்படை திரண்டு
தாழ்வுற்றோரிலெலாம் தலைநிமிர்ந்தாரென்று
யாழ்ப்பாணப் பவனி பல – பலம் பெற்றதன்று!

நெல்லியடி யென்றால் நெஞ்சுரம் பிறக்கும்
கல்லெறி வீழினும் கந்தன் கருணை நடக்கும்
பொல்லடி பட்டுப் பல்லோடுதடு பறந்து போயினும்
எல்லோரும் இந்நாட்டு மன்னரெனச்
சொல்லியபடி சுன்னாகத்து வீதியிலே
அறுபத்தாறு ஒக்ரோபர் இருபத்தொன்றிலே
சொந்தக்காரப் பொலிசார் 'அடி வீழும் கவனம்
அங்காலே அகல்' என அறிவிப்பு இரகசியமாய்த் தெரிவித்தும்
வல்லோரென்போர் தொழிலாளர் என்று
எல்லோருமாய் நின்றீர் சீற்றந்தான் கொண்டு!
சாதிபேசிச் சன்னதமாடல் பாவம்– அவமானமென்று
நீதியோடு நம்சமுதாயம் வாழும் நிலைநின்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோழர் 'சண்' முதலாய் 'சிவராசா' வரையாய்
வாழ்வோம் நாமெல்லாம் சிறந்து!

சொல்லிய நேரம் சொல்லிய இடத்தில்
எல்லோருக்கும் முன் நிற்பது நீங்கள்!
மல்லாவியில் ஏ. எல். மாணவனுக்கு நேர்ந்த
பொல்லாத தோல்வியை கண்டு மனம் புழுங்கி
நலம் ஓங்கிடுமாறு வருந்தியவர் நீங்கள்!
உங்களுக்கென்ன இனிப்போய் விட்டீர்கள்!

உலகில் ஒரு வெளியையும் இடத்தையும் நிரப்பினீர்
உள்ளொளியாய் மறுபிறப்பெடுத்தீர்
தோழர் நெஞ்சிலே நிலைத்து!

கவிப்பொருளானீர்! நூற்பொருளாய் போனீர்!
நெஞ்சுறுதியானீர், ஆய்பொருளாய்ப் போனீர்!
ஏட்டில் இடம்பிடித்தீர்! எதிர்காலப் பரம்பரையின்
தேட்டத்திலிருப்பீர் அன்பிலே பிணைந்து!

முகத்துக்கு நேரே சொலல் முகமன் என்பதாலே
விடைபெற்றுச் சென்றீர்கள்! – எம்மைப்பிரிந்தீர்!

இறப்பு உங்களுக்கு இனிது!
ஏனெனில்
நோயைத் தோற்கடித்த துணிவுக்கது வெற்றி!
நோயோடு சமரசமாய் வாழ்தல் மோசமென்று தானோ
உங்கள் குண நலனுக் கொத்துவராமலோ
போனீர் தோழரே இப்படியாய்ப் பறந்து?

போராட்ட காலமதில் கன்பொல்லை மக்களின்
வேரறுந்து போகாது நேராக உள் நுழைந்து
சோறும் பாணும் கொடுத்தவரைக் காத்துக்
கட்சிக் கடன் எனப் பணி செய்த காதையெல்லாம்
பிறர் அறியாப் பெருமையென்பேன்!
எளிமை
எவருக்குந் தன்னைக் காட்டுவதில்லை
சேவை
எவருக்குந் தன்னை விளம்பரப்படுத்துவதில்லை
உறுதி
எவரையும் பயங்காட்டுவதில்லை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்மை
எவருடனும் விபசாரம் புரிவதில்லை.

நம்பிக்கை,
எதிலும் அட்டகாசம் பண்ணுவதில்லை!
அமைதி,
எங்குஞ் சலசலப்புச் செய்வதில்லை
இன்பம்
யார்க்கும் துன்பம் விளைப்பதில்லை.

எளிமை இனிமை நேர்மை– எதற்கும்
தெளிவாய் துணிவாய் நிற்றல்
பணிவு அன்பு அமைதி– பிழைக்குப்
பணிய மறுக்கும் தகுதி!

எளிமை சேவை உறுதி நேர்மை
நம்பிக்கை அமைதி இன்பம்
இவற்றின் உருவமாய் வாழ்வோர் உலகில்
என்றும் மரணிப்பதில்லை!

எங்கள் ஞானம் சிவஞானம்
எதற்கும் அஞ்சா மெய்ஞ்ஞானம்
கடவுள் அன்று கர்த்தர் அன்று
பொதுவுடைமைப் பக்தர்தான் என்றும்.

எல்லாம் எல்லாருக்கும் என்னுமுலகில் நாம்
இல்லை என்பதை இல்லையாக்கும் மார்க்கத்தில்
மார்க்கண்டேயப் பருவத்தில் மயானம் வென்று
மண்ணில் வாழ்வோம் தலை நிமிர்ந்து!
எண்ணியபடி நாம் திண்ணியவராய் ஏற்றம் பெறுவோம்!
அரசியல் மனிதர் எழுந்து நடப்பார்!

(தோழர் கிருஷ்ணப்பிள்ளை சிவஞானம் (1946–2002) நினைவாக 2003–01–05 –ம் திகதி'உறுதி குலையாத உள்ளத்தின் நினைவுக்காக' எழுதப்பட்டது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03

# இருஞ்சற்றுப் பொறும் எல்லாஞ் சரிவரும்

படைச்சவன் படியளக்க காலி வீதியிலே தேரோடும்
பிஞ்சுப் பாதங்கள் பயில பெற்றார் புகழ்பரப்ப
பரதங்கள் அரங்கேறும் பல லட்சம் செலவாகும்
காசுகள் கரைந்தோட பீத்சா, மக்டொனல்ட், கேஎவ்சி, பலகாரம் பரிமாறும்
படைச்சவன் படியளக்கச் சனங்கள் சாக விமானங்கள் குண்டு போடும்
பிஞ்சுப் பாலகர்கள் சாக பெற்றார் புழுதியில் புரள பிரேதங்கள் பாடையேறும்
சமைச்சபடி விட்டோட பழஞ்சோறும் பச்சடியும் பானைச் சட்டியோடு கவிழும்.

வெளிநாட்டார் உபயத்தில் ஊரிலே கோபுரங்கள் உயரும்
யாழ்ப்பாண ஆசுபத்திரியில் படுக்கக் கட்டிலின்றி குஞ்சுகுருமன்கள் சாகும்
–ஆருக்கென்ன அது அப்படியேயாகுக!

முருகா நீ ஏன் கோவணத்தோடு கதிரை மலையேறி ஆண்டியானாய்
'துறவடா பாக்கை, உரியடா உடுப்பை" Bபொடி செக்கிங்காலையோ – நீ இக்கதிக்காளானாய்?
உரிஞ்ச உடலோடு மாணிக்க கங்கையிலே நீராடி
உன் பக்தர்கள் பொல்லடி பட்ட சேதி கேட்டோ – மலைத்துப் போய் மலையேறினாய்!
– அப்பா முருகா

மாவிட்டபுரம்தான் முருகா நீ மறந்து போனியோ
ஊர்விட்டோடி வந்து இருபது வரிசம் கடந்துபோச்சப்பு
ஆசிட்டைதான் நாங்கள் இனிப்போய் ஆற முருகா!– அப்பா
மனம் ஆற பம்பலப்பிட்டிக் கதிரேசனே கதியானோம் அப்பா! முருகா!
கொழும்பிலை சாகிறதுதான் bபெற்றராம் இப்ப – நல்ல
சவப்பெட்டியும் அங்கை இல்லையாம் இப்ப
எண்ட குழந்தை சண்முகலிங்கம் சொன்ன சேதி தெரிஞ்சோ
அப்பா, முருகா அறுபது தாண்டியபின் கொழும்பிலை செத்தால்
'இப்ப பிள்ளையள் வந்து போகச் சுகம்;


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செத்த வீட்டையும் சிறப்பாச் செய்யலாம் எண்டு
மகேஸ் அக்காவும் செல்வரத்தின அண்ணையும் கொழும்புவர
எக்ஸ்போ எயாலையன் கியூவிலையும் கிளியறிங்குக்கு அலையினமாம் அங்கை
ஆருக்குதுகள், வந்தனாங்ககள் இஞ்சை வடிவாய்ச் சாவம்!

என்ன கண்டறியாத சீவியம்?
என்ரை வீட்டுக் கிணத்திலை
இரண்டு வாளி தண்ணியள்ளிக் குளிக்க வேணும்
என்ரை வீட்டு முருங்கையிலை
இரண்டு பிஞ்சு நான் பிடுங்கிச் சமைக்க வேணும்
வெந்தயக் குழம்பு வைச்சு
முருங்கைக்காய் பிரட்டல் வைச்சு
தாளிச்ச பருப்புக் கறியோடை
மொட்டைக் கறுப்பன் நெல்லுச் சோத்தைக் குழைச்சுப் பிரட்டித்
தின்னத் தின்ன என்ன ருசியப்பா முருகா!

நீ என்ரை அச்சாப்பிள்ளை
வா, நாங்கள் எல்லாரும் ஒண்டாச் சுத்துவம்
வெறியாட்டு வேண்டாம் குஞ்சு
பொய்க்காலும் வேண்டாம் குஞ்சு
தற்கொலை வேண்டாம் ஐயன்.

வேற்படை கொண்டு மயிலேறி
உலா வருவோம் வா முருகா
உன்ரை கோச்சிக்கு இப்ப எல்லாம் விளங்குது
அப்ப முந்தி தன்ரை பாக்கு வெட்டியை
பிள்ளையானிட்டைக் குடுத்ததாலை
அவன் ஆச்சியின்ரை காதை வெட்டி
அப்பளம் பொரிச்சதும்
பாக்கு வெட்டியின்ரை கூரைப் பரிசோதிச்சதும்
ஆச்சிக்கு இப்ப அவன் பற்றி நல்ல அனுபவம்.

கறுத்தக் கொழும்பானை அவனிட்டைக் குடா இனி
ஆறுதலாய் நாங்கள் அகிலம் சுத்துவம்
ஆச்சியின்ரை சொல்லை அப்புவும் மீறார்
அதாலை பயமில்லை
மாம்பழம் கட்டாயம் கிடைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரசங்காரத் திருவிழாச் செய்யலாம்
சூரனின்ரை மாறுவேடமெல்லாம்
மனிசருக்குத் தெரிஞ்சு போச்சு
கடவுளின்ரை வேசத்திலையல்லே கபடிகள் வருகினம்
கள்ளன் பொலீசு விளையாட்டு வேண்டாம் இனி

உள்ளம் எல்லாம் உண்மை விளங்க
இனி எல்லாரும் சுத்துவம்.
தாய்நாட்டுக்கு

நீ எங்களைப் போலவே குருடாயிருக்கிறாய்
உனது காயங்கள் எந்த மனிதனும் திட்டமிட்டதல்ல
உன்னுடைய மண்ணை வெல்வதற்கு
எந்த மனிதனும் உரிமை கோரவில்லை
ஆனாலும் நாம் இருவருமே
சிறைப்படுத்தப்பட்ட சிந்தனை வெளிகளூடு
தட்டுத்தடுமாறுகிறோம்
நமக்கு எதுவும் விளங்குவதில்லை
பெரிதாகத் திட்டமிட்ட உன் எதிர்காலத்தை மட்டுமே நீ காண்கிறாய்
எங்கள் உள்ளங்களின் ஒடுங்கும் பாதைகளாக நாம்
அவரவருக்கு இனிதான வழிகளில் நின்றபடி
சீறிச் சினக்கிறோம், குருடர் குருடருடன் மோதுகின்றனர்,
அமைதி தோன்றியதும்
புதிதாகப் பெற்ற கண்களால்
ஒருவர் மற்றவரின் உண்மையான வடிவை
மீளவும் நோக்கி வியப்போம்
அமைதி தோன்றியதும் அன்பும், கருணையும் நட்புணர்வும் மேவ
உறுதியான கைகள் கோர்த்து,
பழைய வேதனையைப் பார்த்துச் சிரிப்போம்
அமைதி வரும் வரை இருப்பன
பெருங்காற்றும் இருளும் இடியும் மழையுமே.

ஐய,
முருகைய,
பையவே சென்று பாண்டியர்க்காகவேயென்று
பெய்யவில்லை நின்கவி, பழி தீர்க்கவில்லை உன்கவி
உய்யவிளை உலகத்தார் உண்மையுணர்கவென


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்யானாய்
பொய்யெல்லாம் போயகல மையானாய்கவிக்
கையானாய்
பொய்யழகே கவிதையெனும் போலிகளோ
வேலிகளானார்
வேலிகளே எங்கள் வளவுகளை மேய்ந்தார்– அந்தச்
சோலிகளே எங்கள் வாழ்வாய் போனதனால்
ஆர் பெற்ற பிள்ளையோ பிணமானார்– எந்த அன்னையின் தனிமகளோ சவமானாள்
ஊர் பெற்ற பிள்ளைகளை உன் பிள்ளையென
ஒப்பாரி பாடினாய்
புல்லுக்கும் உயிர் சொன்னாய்
பூவுக்கும் உயிர் சொன்னாய்
பிள்ளையும் புல்லென்றாய் பூவென்றாய்
எல்லாஞ் சரிவரும் நல்லாய் நடிக்கவென்று
நாடகம் ஆக்கி வைத்தாய்

(கவிஞர் முருகையன் நினைவரங்கு –2007)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'நிற்க அதற்குத் தக'

/

பொங்கல் செய்வது எங்கள் மண்ணில்
எங்கும் நிகழ்வது – வாழ்வு
பொங்க மக்கள் மகிழ – மனிசர்
நாங்கள் எப்போது நினைப்பது

'கற்க கசடற கற்றவை கற்ற பின்
நிற்க அதற்குத் தக'

வள்ளுவன் சொன்ன வழி
வாழ்க்கையில் வாழும் வழி

படிப்பதுவும் தெளிவுபடப் படிப்பதுவும்
படிப்பவை படித்த பின்
கொண்ட கொள்கைப்படி நடப்பதுவும்
கண்டவாறு அலம்பாமல் படித்தபடி
செயற்படுவதும் செயலில் வெற்றியெனில் – அதனைக்
கடைப்படிப்பதுவும் தொடருவதும்
செயலில் தோல்வியெனப் பட்டறிவு பகரின்
பகுத்தறிவு வழி தவறை ஒப்புவதும்
தக்கபடி திருந்திய செயல் வழி நடப்பதுவும்
'நிற்க அதற்குத் தக' எனக் கவி
அரங்கைத் தொடக்கும் பணி துணிந்தேன்

துணை நிற்பார் கவிஞர்,
எதற்குத் தக நிற்பதெனத் தெளிவாய் மொழிவார்
'தெளிவே தெய்வம்' என முருகையப் பெரு முனி முன் சொன்னார்
எந் தெய்வம் எமை ஆட்கொண்டருள
பொங்கல் விழாக் கவியரங்கில்
அங்கிங்கென்னாதபடி தூணிலுந் துரும்பிலுமுறை
உழவுப் பெருஞ் சக்தியே! – என் நாகாக்க
கவி சொல்வாய் –உளம் பொங்கக்
கவியருள்வாய் – தாயே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்க நடக்க செய்க— நினைப்பவை நினைத்தவை பின்
கற்க, நடந்ததை நடப்பதை இருப்பதை அறிக
நல்லதை நல்லதுள் கெட்டதைக் கண்டறிக
கெட்டதை கெட்டதுள் நல்லதை தேர்ந்தறிக

அறிந்ததை அறிந்த பின் அறிவு பெற— அதன்படி
நிற்பதுவே நடப்பதுவே செயற்படுவதுவே
உற்ற பகை கொய்வதுவே உலக மாந்தர்
உய்வதுவே கற்பொழுகிச் செய்வதுவே

'சொல்லுக அச்சொல்லை வெல்லுஞ் சொல்
இன்மை அறிந்து!
சொல்லுவதைச் செய்க — அச் செயல்
செய்வாரின்மை அறிந்து
சொல்லுவதைச் செய்தல்
செய்வதைச் சொலல்
'கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை'
சொல்லியவாறு செயலின்மை
செய்யாமை யெனும் செய் குற்றஞ் செய்வார்
பையவே யவர் சுற்றம் பொய்யாய் கெடும்
எனவே— 'நிற்க அதற்குத் தக'

2
அம்மா வேலை அப்பா வேலை
ஆருமில்லையே— குழந்தாய்
சும்மா கிட ஊரிலிப்ப ஆருமில்லையே
ஏணை இல்லை ஆட்ட ஒரு ஆளுமில்லையே
வீணை இல்லை மீட்ட ஒரு விரலுமில்லையே!
ஆறில்லை குளமில்லை கிணறுமில்லையே
ஆறுதலாய் குடிப்பதற்கு நீருமில்லையே
வேறு ஆரோ தரும் போத்தில் தண்ணீர் காசுக்கு
ஊறு இல்லை உலக நியதி நின்று பாடுவோம்'

மாட்டுப் பாலை கறந்து விற்று
காசு ஆக்குவோம்
மைலோப்பாலை அறா விலைக்கு
ஸ்ரோவில் உறிஞ்சுவோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேப்பரை நம்பு பேர் புகழ் பெறுவாய்
செய்தியைப் படி உயர்வு பெறுவாய்
எஸ் எம் எஸ்சை நம்பு
எல்லார் அடி பரவ.

யோசிப்பது சிரமம் யாசிப்பது வலு சுலபம் – விசு
வாசிப்பது பெருலாபம் – பிறர்
யோசிப்பது உலக மயம்.

பிரதமரைப் பார் பெற்றுவர
ஜனாதிபதியை நம்பு ஆனதெலாம் பெற – பிற
ஆரையும் நம்பு உன்னைத் தவிர
உன்னை நம்பாதே, பிறரை நம்பி நட.

அரச செய்திகள் தருவாய் பேப்பரே போற்றி
நாடகந் தருவாய் ரீவியே போற்றி
தூரத்துறவுகள் கறிக்குதவும் .:பேஸ்புக்கே போற்றி
ரஜனி, விஜய் படந்தரும் ரீவியே போற்றி.

தார் றோட்டுக்கள் வாழ்க ஒழுங்கைகள் மாள்க
வாகனங்கள் பெருக மனிசர்கள் மாள்க
தற்கொலைகள் வாழ்க தண்டவாளங்கள் பெருக
உழவர்கள் மாள்க இந்தியப் பாலமே வருக.

அமெரிக்கா வாழ்க இலங்கை மாள்க
இந்தியா வாழ்க இல்லங்கள் மாள்க
சீனா வாழ்க சிங்களவர் வீழ்க
கனடா வாழ்க தமிழர்கள் மாள்க
இங்கிலாந்து வாழ்க இங்கிருப்பார் மாள்க
டயஸ் போறா வாழ்க இங்குளார் சாக!

வீடின்றி நிலமின்றி இங்கிருப்பார் மாள்க
சோறின்றி ஊரின்றி இங்கிருப்பார் சோர்க
வேரின்றி ஊரின்றி வெளிநாட்டார் தமிழ் வாழ்க
தனியர்கள் வாழ்க திருமணங்கள் மாழ்க
கர்ப்பிணிகள் இன்றி குடும்பங்கள் வாழ்க
குழந்தைகள் இன்றி கிராமங்கள் தூங்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோசனை கைவிடு
உன்னை மற உலகம் இருக்கு
உலகமயத்தை நம்பு அயலாரோடு
கதைப்பதைக் கைவிடு– நேராக
எவரோடும் பேசாதே
உறவினர் சுற்றத்தை மற!

அப்பாவை மற அம்மாவை மற
ஆச்சியை மற அப்புவை மற
அண்ணரை மற அக்காவை மற
குஞ்சியப்பு மற குஞ்சாச்சி மற
சீனியப்பு மற சீனியம்மா மற
மாமாவை மற மாமியை மற
அம்மானை அற அத்தையை மற
பேரனை மற பேத்தியை மற
பீட்டனை மற பீட்டியை மற
வீட்டை மற ஊரை மற
நகரம் பற பற நாட்டைவிட்டு நாடு பற பற
மொழியை மற மற உறவை மற மற
தேசம் மற மற நேசம் மற மற

ஒபாமாவிடம் பற பற ஐயாத்துரையை மற மற
கமரோனிடம் பற பற கந்தையாவை மற மற
ஜெனிவாவிடம் பற பற இலங்கையை மற மற
எமலோகம் பற பற சொர்க்கமெங்கள் நாடு மற மற
முகத்தை முகம் நோக்கா மோபைல்கள் வாழ்க
ஸ்கைப்பில் சிரிப்போம் எல்லோரும் வாழ்க

பேசுக பரிசில்கள் பெறுக
பேசுக பாராட்டுப் பெறுக
பேசுக கைதட்டல் விசில்கள் பெறுக
பேசுக கேட்பாரெல்லாம் பேயராக!

கூட்டங்கள் வைக்க குசலங்கள் செழிக்க
நோட்டங்கள் பார்க்க நொடிப்பொழுதில் அழிக்க
சுயவின்பச் சுவையுள் சூத்திரங்கள் பொழிய
கூடுக, கூடிப் பின் கலையப் பேயராக்குவோம் யாரையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3

ஐயம் தீர அறிவைப் பெருக்கி
மெய்யும் பொய்யும் தெளிய
சமூக விஞ்ஞானங் கற்று
படித்தோரைப் படித்தாரே யாசிக்க
உழைப்பாளரை உழைப்பாளரே வாசிக்க

தொழிலாளி முகம் பார்
விவசாயி மூஞ்சை பார்
நெற்றியின் சுருக்கம் ஏன்
நெட்டுருகி நிற்பதேன்
விழிகள் பிதுங்கி மேற் சொருகுவதேன்
புருவங்கள் சுருங்கி சிணுங்குவதேன்
நெஞ்சுருகி மன அழுத்த 'வடு' விழுங்கி
பிஞ்சிலே பதறுவதேன்?

மூத்தோர் முகம் பார்– அவர்
ஆத்தாது அழுது சொல்லுங் கதை கேள்
நீத்தார் புரியனென்று தலைமைப் பெண்
காத்தார் குடும்பமெனும் காரியங் கேள்
அநாதை அகதியெனும் மனிதரின் சொல்
அகராதி அழிந்து போக ஆவன செய்

மாடு வளர்ப்பவரும் மரவேலை செய்பவரும்
மேசனாரும் பிளம்பரும் சாரதியும்
இரும்பை உருக்குவாரும் கோடரி கத்தி
மண்வெட்டி பிக்கான் சுத்தியல் அரிவாளென
எண்ணற்ற தொழிற்கருவி செய்வாரும் செப்பனிடுவாரும்
பூமி பழுதாகாமல் வேளாண்மை செய்வாரும்
இயற்கையோடு உறவாடி
தன்னுணவை தானே தோட்டத்தில் செய்து
வீட்டைத் தோட்டமாய் விருத்தி செய்வாரும்
நிலத்தடி நீரைக் காப்பாரும்
மலக்கழிவு உர விஷம் கடல் நீர்
கலவாது ஓயில் பாச்சி
பல் தேசியக் கொம்பனிக்கு உதவாரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்ப்பாரும் கொதிப்பாரும்
ஒரு சொட்டு மழை நீரும் கடலை சேராது
குளத்திலை கிணற்றில் நிலத்தில் சேர்ப்பாரும்

சூரிய சக்தியில் மின்சாரம் விதைப்பாரும்
வெளியாரின் ஊடுருவல் மூலதனத்தை விலக்குவாரும்
சொந்த மக்கள் நிதியத்தைச் சேர்ப்பாரும் இணைவாரும்
தேச மண்ணின் உணவையே புசிப்பாரும்
தூரத்தே இறக்குமதியை தவிர்ப்பாரும் வெறுப்பாரும்

உணவு மருந்தெனவே மதிப்பாரும்– நிறை
உணவு விருந்தினையே வழங்குவாரும்
நிரம்பி வழியும் வெளியாரின் பொருட்களில்
வீட்டு விடுதலையாகி தேசத்தை நேசிப்பாரும்
விவசாயி தொழிலாளர் நலன் பேண பிரதம விருந்தினராய்
மங்கள நிகழ்வுகளிலே மாண்புகள் பெறுவதுவும்
உழைப்பாளர்கள் நுகர்வோர்கள்
வலைப்பின்னல் அமைப்பொன்றை
வீட்டுக்கு வீடும் ஊருக்கு ஊரும்
ஆளுக்கு ஆளுமென எல்லோரும் ஒருவருக்காய்
ஒருவரே எல்லோருக்குமாய் ஒன்றாகி நன்றாகி
ஊராகி நாடாகி நாமொன்றாய்
நன்றாகி நிற்பதுவே நம் கடனாகி
நாளெலாம் நற்பொழுதாய் மகிழ்வதுவேயல்லாமல்
வேறென்ன நாமறியவோம்
விளலலம்பி ஓய்வோமா
வீண் பொழுதில் வீழ்வோமா!

எங்கள் வயலில் நெல்லு விளைப்பாரும்
எங்கள் கடலில் மீன், றால், நண்டு பிடிப்பாரும்
இன்னல் பட்டு துக்கத்தில் துலைந்து வக்கணப்பட்டு
வாழ்வை இழப்பாரும் தம் வாழ்வில் உயர்ந்து நிற்க,
யாழ்ப்பாணம் உயரும்
யாழ்ப்பாணம் உயர வடக்கு உயரும்
வடக்கு உயர கிழக்கு நிமிரும்
வடகிழக்கு நிமிர மலையகம் வளரும்
மலையகம் வளர இலங்கையே நிமிரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் மாற முஸ்லீம் மாறுவர்
முஸ்லீம் மாற மலையகம் மாறும்
மலையகம் மாற சிங்களவர் மாறுவர்
எல்லோரும் மாற இலங்கை மலரும்
இது எங்கள் நாடு எனும்
முரசங்கள் அறையும்

வங்கிகள் விலக கூட்டுறவு உலவ– கடனால்
ஏங்கியோர் பழக மங்களம் முழங்க
தொழில் துறைகள் எங்குந் தழைக்க
தொழிலாளி விவசாயி எங்குந் துலங்க
பூமியெங்கள் பக்கம் திரும்பும்
ஆமியும் துவக்கும் விலகியோடும்
சாமியும் பொய்யும் சன்னதங்கொள்ளும்
சத்தியம் வெல்லும் சமுதாயம் காண்போம்

சடங்குகள் கலைய துடக்குகள் துலைய
சுயமரியாதை மனிசர் நிமிர
சுய பொருளாதாரக் கிராமங்கள் இணைய
புலம்பெயர் உறவுகள் மீளவும் இணைய
மனிசர் மனிசரை மதித்து நடக்க
மதங்கள் நீங்கி ஆணவம் அகல
முரண்கள் உறவாகி காதல் பொழிய
சாதியம் தகர சந்ததிகள் சிறக்க
பாதி மனித மாதர் தலையோங்கத் தளை அகல
அரங்குகள் கலை விளங்க புத்தகம் வாசித்து மகிழ
குறுந்தேசியக் குரங்குகள் தலைதெறித்தோட
பெருந்தேசியப் பிசாசுகள் பேயாட்டங்கலைய
–யாழ்ப்பாணம் உயரும்–

ஆசியா எங்கள் அருகே அமரும்
அமெரிக்கா எங்களை விட்டே அகலும்
ஆப்பிரிக்கா எங்கள் கூடவே ஆடும்– தென்
அமெரிக்கா எங்கள் குலத்தோடு முடிசூடும்
இந்திய மக்கள் எங்கள் இதயத்தாலிணைவர்
முந்திய பகையெங்கும் முந்தியே கலையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்திய இரத்தம் செவ்விரத்தம் என்பதால்
எந்தையர் வாழ் நிலம் செம்மண் என்பதால்
-யாழ்ப்பாணம் உயரும்-

சாதாரண மனிதர் சரித்திரத் தொடக்கம்
சத்தியமாய் உலகமயச் சவத்துள்ளடக்கம்
இத்தரை ஆண்டு முத்திரை பதிப்பர்
நித்திரையின்றி நீடுழைப்பார் எம் தொழிலாளி விவசாயி

தமிழ் எங்கள் மொழிதான்
தாரகம் பொதுமையறந்தான்
தாயகம் எங்கள் நிலந்தான்
உறவு எங்கள் உழைப்பேதான்
உதிரம் என்பது சிவப்பே தான்
அடையாள மென்பதே தொழில்தான்
அகிலமெங்கும் சர்வவியாபக உண்மைதான்

உண்மையை அறிய நன்மையைக் காண்க
நன்மையைக் காண நாசமறுப்பாரின் பொய்யும்
பொய்யுமுரைக்க மெய்யாய் பயில்க
கற்கக் கசடற மக்களை ஏய்ப்போரின் களவைக் கற்க
களவைக் கற்றபின் காரியமாற்றுக
காரியமாற்ற ஓரியக்கமாகிப் பேரியக்கமாகி
எல்லோரும் ஒருவராக ஒருவர் எல்லோருமாக
வல்லவராகுக வளம் பல பெறுக
இல்லாமை யொழிக எல்லாம் பெறுக

களவையும் பொய்யையும் கற்ற பின்
மறக்க, மறந்து பதவி துறக்க
உற்ற பகை ஓடி உயிர் கறக்க
வீற்றிடுக! உழைப்பவர் உள்ளத்துள்!
போற்றிடுக பொதுமையறம்!
பொங்கிடுமே மாந்தர் வாழ்க்கையறமும்.

(கொக்குவிலில் தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் 16.11.2016இல் நடாத்திய உழவர் விழா கவியரங்கில் படிக்கப்பட்டது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05

# 'எதை எடுத்துச் சொல்ல...'

*உலகெலாம் உணர உதவியருளிய*
*'சொல்லுவது நீ தீர்மானிப்பது நாம்'*
*எனச் சாற்றிடும்*
*சக்தியே சரணம்! மகாராஜா தாள் போற்றி!*

*எல்லாவுரும் நாமறிய எம்முயிர் காத்து*
*போக்குவரவில் உனையே நம்பிய*
*எம் தனியார் வாகனச் சாரதிகாள்!*
*காசுக்காய் கழுத்துருளும் காலமதில் வாழும் இக்கணத்திலும்*
*என் உயிரோடும் வாயில் கவியோடும்*
*காணுதற்கருளிய*
*ஆயிரம் பல்லாயிரமாய்*
*காசாஸ்த்திரம் வீசிக் கணத்தில் லைசென்ஸ் பெற்ற*
*பெருந்தகையான சாரதிகாள்*
*பணிந்தேன் உமையே!*

*துப்பாக்கி வில்லழுத்தித் துலைத்தழிக்கும் பெரும் பணியில்*
*இப்புவி காத்தழிக்கும் பேரினத்துப் பெரும் படையே– இராணுவமே,*
*இனந்தெரியா நபர் எனப்பேர் சூட்டும்*
*இனியாரே நல்லாரே வல்லாரே*
*சாஸ்டாங்கமாய் யான் வீழ்ந்தேன்*
*சத்தியமாய் சரண், நாயகர் நீரே*
*காத்தருள்வீர் தயவாய்!*

*இனி, இவ்வரங்கில்,*
*தலை தப்பி தலை நிமிர்த்தி கலை வளர்க்க*
*வானலைச் சொல்பரப்பி குரலெடுத்தோதும்*
*பித்தா! பெருங்கலைஞ,*
*இவ்வரங்கச் சிம்மாசனம் அமர் தலைவ, தயானந்தா,*
*வணக்கம் நான் வைத்தேன் முதற்கண்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராங்குப் பெரும்படைக் கவிப்பெருங் கவிஞர்காள்,
ஆரிங்கு பாடவுளார், வாருங்கள் கேட்பமென
ஊரோடு உறவோடு அறிஞர்தம் உலகோடு
பார்த்துப் பெருமை எமக்களிக்க வந்து
காத்திருக்கும் பேரவையே, பெருமக்காள்
உங்கள் உள்ளத்தில் ஓரிடந்தந்து
எங்கள் பணிசிறக்க கருணை மழை பொழியும்
தங்கள் அன்புக்கும் ஆதரவுக்கும்
நன்றி சொல்வோம் நாம்.

இலங்கைக் குமரி என்றொருத்தி
இவ்வுலகில் இருந்தாள் முன்னாளில்
பாவம், அவள் கதை சொல்கிறேன் கேட்பீர்!
பூப்படைய முன்னமே
கட்டிவைத்தார் ஒரு கலியாணம்
சருவ சன வாக்குரிமையன் எனும் ஒரு கேடிக்கு
வாத்சாயனாரை அறியாள்– அவள்
வள்ளுவர் சொல் சூத்திரந்தான் தெரியாள்

உண்ணாணைப் பார்த்தால் விடமாட்டியள்
'செவ்விளநீர் போலச் சிவந்த சிறுபெட்டை ' யென
மஹாகவி சொல்வது போல் இருப்பாள் பொடிச்சி
இசைஞானி எங்கள் அண்ணன் இராவணனார்
இச்சையுடன் வடித்தவொரு இசைக் கோலமே
எங்கள் இலங்கை.

இந்து சமுத்திரத்தில் விளைந்த முத்து எங்கள் சொத்து
சிங்களத் தீவெனச் செப்பிய பாரதியோ
'குவலயத்தின் கண்போல்வான் யாழ்ப்பாணத்தான்' எனப்
பாமாலை தொடுத்தான் புகழ்ந்து.

நீலச் சேலை போர்த்தி
பச்சைமரத் தென்னஞ் சோலைப் பாய்விரித்து
இரத்தினம் முத்து விளைந்து
உயரப் பனையேறி
வான் முகட்டைத் தொட்டுத் தடவிக் கதைபேசி
மலை முனியாய் ஞானத் தவ முனியாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையகத்து மாந்தரை வானுயர்த்திச்
சிவனொளி பாதமாய் சிந்தை கவர்ந்து
மாவலி களனி கங்கைகள் பாய
வடிவாய்த்தான் நடைபயின்றாள் இலங்கைக் குமரியவள்.

உழுதார் உழைத்தார் தேயிலை கொய்தார்
அள்ளிக் கடல் கொடுக்க
தோணி கட்டுமரமேறி
வாளை முரல் திருக்கை சுறா சீலாவென
ஆளையாள் கரைவலை கூடியிழுத்து
'ஏலேலோ தத்தெய்தாம் ஏலயேலோ' பாடி
அப்பு, ஆச்சி, குஞ்சாச்சி, மாமியென மகிழ்ந்தார்
சீனியப்பு, சீனியம்மா, அத்தான், மச்சானென்று
ஆசையோடு மொழிந்தார்
அன்பு மழை சொரிந்தார்

இலங்கைச் சிறுமியிவள் சின்னனிலை
செல்லமாய் வளர்ந்து செழித்தாள்
அள்ளி ஆசை முத்தஞ் சொல்ல இனி
ஆர்தான் விரும்பாயினை அவளை

அயலூர் காவாலியள் சிலர்
கண்வைத்தார்
போர்த்துக்கீசன், ஒல்லாந்தன் உதவாக்கரைகள்
கேட்டுக் கேள்வியின்றி பிள்ளையைக்
கடத்திப் போட்டான்கள்
சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம்
புரிந்தார் கடிமணம் புரிந்து.

கதாநாயகன் வேஷத்தில் வெள்ளையன் வந்தான்
அபயக் கரம் தந்தான்
இங்கிலீசு இனிதென மொழிந்தான்
உதாவாக்கரை வில்லன்கள் பிறர் எனச் சாற்றி
உதைத்துக் கலைத்தார் ஒல்லாந்தர் தமை
எல்லோரும் ஒன்றாய் வாழ்த்துப்பாடி
வரவேற்றோம் வெள்ளையனை வியந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாளிப்பாய் வளர்ந்தாள் குமரியவள்
வாய்பேசச் சற்றுத் துணிந்தாள்
அப்போது நடந்ததிந்த அநியாயம்?
தட்டுகள் மாற்றினார்– தம்முள்
சம்பந்தம் கலந்தார் துணிந்து.

எட்டுச் செவு செய்தது போல்
பறை முழங்க, வெள்ளையன்
கட்டிவைத்தான் ஒரு கலியாணம் நாற்பத்தெட்டில்
எங்கள் குமரியவள் தலை குனிந்தாள்
கெட்டி மேளம் கொட்ட கட்டினான் தாலி– அச்
சுதந்திரன் என்ற சோணங்கிக் கொடும்பாவி
கட்டிலும் இல்லை கண்ணயரத்
தொட்டிலும் ஆடவில்லை– அங்கே
ஆராரோ பாட ஒரு ஆளுமில்லை.

பராயமடைந்த எங்கள் மணப்பெண்
ஆராயாமல் சுதந்திரனைக் கட்டியதால்– தலை நீட்டியதால்
யாழ்ப்பாணத் தேச வழமைச் சட்டத்தின்
விதியைப் போல தலைவிதியமைந்தது
திருமணம் கட்டியதால் வயதுக்கு வந்த பெண்ணவள்
பராயமற்ற சிறுபிள்ளை போலானாள்
சட்டமியற்ற சரியோர் ஒப்பந்தம் செய்யத்தன்னும்
கட்டிய கணவன் சம்மதமின்றி எதுவுஞ்
செய்யவியலாப் பொம்மையானாள்.

'மௌனமாய் வாழுதலே
கற்பெனக்' கற்பிக்கப்பட்டாள்
வாய்விட்டுச் சிரித்தல்
கால் அகட்டிக் கம்பீரமாய் நடத்தல்
தலை நிமிர்த்தித் திரிதல்
கை காட்டிப் பேசல்
யாவும் எங்கள் இலங்கைப் பெண்ணுக்காகாது
மல்லாந்து படுத்தலே கடன்,
எல்லோரும் இட்டார் கட்டளை
பெண்ணின் பெருமை பேசி
இலங்கைக் கண்மணியின் அழகு பேசி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசைத் தீ மூட்டி
ஆக்கி வைத்தார் ஆக்கினைகள்
ஓடி விளையாடி மகிழ்ந்த எங்கள் செல்லம்
முடமாக்கப்பட்டாள்
கல்லானாலும் கணவன்
புல்லானாலும் புருஷன்
போக்கிரிஞாயம் பேசிப் பூட்டி வைத்தார்
எங்கள் கோமள நாயகியை.

பிள்ளையவள் என் செய்வாள் பேய்ச்சி,
சுதந்திரன் என்னும் உலக்கையனோடு
பேச்சறியாள்,
பேயனவன் சுவையறியாள்.

பின்னாளில்,
சுதந்திரனின் நண்பர் சிலர் வந்து செல்வார்
மனித உரிமையன் என்னும் தடியன்
சுப்றீம் கோட்டுச் சுவரினுள்
கறுத்தக் கோட்டினுள் காசுடன் நடப்பவன்.
வந்தான் போனான்
என்ஜிஓவன் எருமையன் வந்தான்
சிரித்துப பேசினான்.
சனநாயகன் எனும் அடுத்தவூரான்
அடிக்கடி வந்தான்
சள்ளடிச்சான் சரியாய் மினக்கெட்டான்
ஊடகத்தான் சோம்பேறியும் வீட்டில் கிடந்தான்
சண்டியர் சிலரும்
சஞ்சலம் மிக்கார் பலரும்
வந்தார் போனார்
மல்லாந்தாள் எங்கள் மங்கையிவள்.

எங்கள் செல்வத்தை
எங்கள் முத்தை
எங்கள் முகத்தை
எங்கள் சொத்தை
எங்கள் சுகத்தை
எங்கள் குழந்தையைப் பிய்த்தெடுத்தார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயகோ, என்னென்பேன்
என் செய்வேன், என் சொல்லேன்!
பட்டமரமானேன்,
பாவியாய்ப் போனேன்– இனி
எதை எடுத்துச் சொல்ல
துரியோதனனார் சபையில் திரௌபதியானாள்
இராமனின் தீ நெருப்பில்
சோதரி சீதை வீழ்ந்தாள்
தில்லைவாழ் அந்தணர் தீயில்
எங்கள் நந்தன் செத்தான்
ஞானசம்பந்தன் தீயில் பொசுங்கினான்

'இது பொறுப்பதில்லை– தம்பி
எரி தழல் கொண்டு வா'
எழுவோம் இணைவோம்
நீள நடப்போம்
நிமிர்ந் தொன்றாய்

ஊருக்குழைத்திடல் யோகம்– நலம்
ஓங்கிடுமாறு வருந்துதல் யாகம்
போரிட நின்றிடும் போதும்– உளம்
பொங்கல் இல்லா அமைதி மெய்ஞ்ஞானம்.

– கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் இ. தயானந்தா தலைமையில் இடம்பெற்ற கவியரங்கில் பாடியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போகாத ஊரும் பொய்யான வழியும்

I

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞன்
இருக்கின்ற தமிழர் இன்னலின்றி வாழவும்– தமை ஆளவும்
நறுக்கென்று சொன்ன கவி வார்த்தைகள்– பெருமாற்றங்கள் பெற்று
மறுமலர்ச்சி கொண்டு தமிழ் உலகினர்– உயிர்
தளிர்த்தனரா? அன்றேல் தறுக்கணித்தனரா?
தேங்கினரா? தம்நிலை ஓங்கினரா?
ஏங்கினரா? தம்நிலை வீங்கினரா?

பாரதி கண்ட ஊரும் உலகும்
பாரதி சொன்ன வீடும் வீதியும்
பாரினில் சொல்ல நாமினி வந்தோம்
ஆரினித் தடுக்கினும் அது பொறுக்கிலோம்.

பாரதி போனபின் எம்மூர் ஏன் நாம் இன்னும் போகவில்லை?
ஆரது கெடுத்தார்? ஏனது செய்தார்? எங்கள் வேரது அறுத்தார்?
போரது செய்வோம், மார் நிமிர்த்தியெழுவோம்.

'வீரியம் மிகுந்த மேன்மையோர் இருமின்
மானமே பெரிதென மதிப்பவர் இருமின்
ஈனமே பொறாத இயல்பினர் இருமின்
தாய் நாட்டு அன்பறாத் தனயர் இங்கு இருமின்
கலையறு மிலேச்சரை கடிபவர் இருமின்
ஊரவர் துயரில் நெஞ்சுருகுவோர் இருமின்
உடலினைப் போற்றா உத்தமர் இருமின்'

பாரதி போற்றும் பைந்தமிழ் நாட்டின் பாசமே பெரிதாய்
போற்றிடு தமிழா! நாம் ஒன்று பற்றி யெழுவோம்
வேடர் விரி வலையை தூக்கிடும் புறாக் கைகளாய் பற்றுவோம்
தேர்தல் தேர்தல் தேர்தலென்று நம் தாய்நாட்டின்
தலையைத் தரையில் தேய்த்திழுத்தார் யார்?
ஐநூறாண்டுகள் அடிமையாய் கிடந்தோம்
பறங்கியர் போனார் என்று உறங்கினோம்
ஒல்லாந்தர் ஒழிந்தார் என்று முனங்கினோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளையனை வெளியேற்றினோம் என்று நம்பினோம்!
உறங்க முடிந்ததா? முனகல் தீர்ந்ததா?
வெறுங்கையராய் வீணராய் வீழ்ந்திட்டோம்
சிங்களர், தமிழர். முஸ்லீம்கள் எனச் சினந்தோம்
பொங்கினோம், தலை வீங்கினோம் தமிழ் பொங்கினோம்
சிங்கள நாடென்று சீர் பெருக்கினோம்
தமிழர் தலை பொறுக்கினோம், சிங்களர் தலை உருட்டினோம்
ஆளையாள் மாறி உறுக்கினோம்
ஆள்புலப் பிரதிநிதித்துவ ஆழச் சேற்றில் கால்கள் புதைத்தோம்
அதுவே சனநாயகம் என்று திமிறினோம் முறுகினோம்

பிறப்பால் பிரித்த பிரித்தானியர் விரித்து
சுருக்கி இழுத்த தேர்தல் சுழியில் சிக்கியழிந்தோம்
அதுவே சனநாயகமென்று ஆர்ப்பரித்தோம்
'அபே றட்ட' என்று வெறி கொண்டோம்
'ஆண்ட பரம்பரை' என்று வீறு கொண்டோம்
'பற தெமில' என்று பாசங்கொண்டோம்
'சிங்கள மோடய' என்று ஊடல் பட்டோம்
ஆர்விரித்த வலையில் ஆர்விழுந்து போனோம்
சேவலும் மயிலுமாய் மாற்றிட ஏன் இன்னும்
சங்காரங்கொள் சனமாய் மாறவில்லை?
சமாதானப் புறாக்களாய் இனவெறித் தேர்தல் வலையை
ஏன் சிதைக்கவில்லை
பிறப்பால் எங்கள் உழைப்பால்
கருத்தால் எங்கள் ஒருமித்த திறத்தால்
பெரும்பான்மை சிறுபான்மை யெனும் சிறப்பால்
உயர்ந்திடு பங்குபெறு சனநாயகப்
பாதை சமைத்திடுவோம் எங்கள் ஊர் போய்ச் சேர்ந்திடுவோம்.

## 2

பாரதி பாடிய
ஊர் நாங்கள் போகவில்லை
பொய்யான வழியெலாம்
போக்கறுந்து போய்விட்டோம்

பாரதி காட்டிய ஊருக்குப் போவோம்
பாரதிர நாம் படையணி திரள்வோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆருமினி பொய்வழி காட்டின்
போரும் முழங்க வாரும்
ஆளும் பேரும் ஊருமாய் இணைவோம்
உலகெலாம் ஒன்றாகி செஞ் சூரியனாய் எழுவோம்
பாரதி பாடலை பாரதிர முழங்குவோம்
வாருங்கள் நன்றாய் பாரதி மந்திரக் கவிமழை
மாரியாய் பொழிவோம்

### 3

பாரதி பாடல்

தன்னுயிர் போலே தனக்கழிவு எண்ணும்
பிறனுயிர் தன்னையும் கணித்தல்;
மன்னுயிர் எல்லாம் கடவுளின் வடிவம்
கடவுளின் மக்கள் என்று உணர்தல்
இன்ன மெய்ஞ்ஞானத் துணிவினை மற்றாங்
கிழிபடு, போர், கொலை, தண்டம்
பின்னியே கிடக்கும் அரசியல் அதனில்
பிளைத்திடத் துணிந்தனை...

'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்– வீணில்
உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்
விழலுக்கு நீர்பாய்ச்சி மாயமாட்டோம்– வெறும்
வீணருக்கு உழைத்துடலம் ஓயமாட்டோம்'

நாமிருக்கும் நாடு நமது என்பது அறிந்தோம்– இது
நமக்கே உரிமையாம் என்பது அறிந்தோம்– இந்தப்
பூமியில் எவர்க்குமினி அடிமை செய்யோம்

'சாதி இரண்டொழிய வேறிலையென்றே
தமிழ் மகள் சொல்லிய சொல் அமிழ்த மென்போம்
நீதி பொறியினின்று பிறர்க்குதவும்
நேர்மையர் மேலவர் கீழவர் மற்றோர்

முப்பது கோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொது உடைமை
ஒப்பிலாத சமுதாயம்
உலகத்துக் கொரு புதுமை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதருணவை மனிதர் பறிக்கும்
வழக்கமினியுண்டோ?
மனிதர் நோக மனிதர் பார்க்கும்
வாழ்க்கை யினியுண்டோ?– புலனில்
வாழ்க்கையினி யுண்டோ? நம்மிலந்த
வாழ்க்கையினியுண்டோ?

இனிய பொழில்கள் நெடிய வயல்கள்
எண்ணரும் பெருநாடு–
கனியுங் கிழங்குந் தரணியெங்கணும்
கணக்கின்றித் தருநாடு –நித்தநித்தம்
மனிதருணவை மனிதர் பறிக்கும்
வழக்கமினியுண்டோ?

தனியொருவனுக் குணவில்லை யெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்
எல்லாரும் ஓர் குலம் எல்லாரும் ஓர் இனம்
எல்லாரும் இந்நாட்டு மக்கள்
எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்

பறையருக்கும் இங்கு தீயர் புலையருக்கும் விடுதலை
பரவரோடு குறவருக்கும் மறவருக்கும்– விடுதலை
திறமை கொண்ட தீமை யற்ற தொழில் புரிந்து யாவரும்
தேர்ந்த கல்வி, ஞானம் எய்தி வாழ்வம் இந்த நாட்டிலே

ஏழை என்றும் அடிமை என்றும் எவனும் இல்லை– ஜாதியில்
இழிவு கொண்ட மனிதர் என்பது இந்தியாவில் இல்லையே
வாழி கல்வி செல்வம் எய்தி மனம்மகிழ்ந்து கூடியே
மனிதர் யாரும் ஒருநிகர் – சமானமாக வாழ்வமே
மாதர் தம்மை இழிவு செய்யும் மடைமையைக் கொழுத்துவோம்
வைய வாழ்வு தன்னில் எந்த வகையினும் நமக்குள்ளே
தாதர் என்ற நிலைமை மாறி ஆனந்தமோடு பெண்களும்
சரி நிகர் சமானமாக வாழ்வம் இந்த நாட்டிலே

–'பாரதி' கவியரங்கக் கவிதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07

# காணி நிலம் வேண்டும்

காணிநிலம் வேண்டிக் கவிபாட– அக்
காணிநிலம் கோணிக் குழியாகி– இப்புவி
பாறிப் புதைகிறார் மலைமாந்தர்
சவமாகி!
சிவமே சித்தங் கலங்கினார் சுடலைத்தூசி
பொறிபட!

கடலே, நீயே சுனாமிப் பிசாசாயின்
நிலம் நோக்கி நான் ஓடுவேன்
கண்டபடி ஷெல்லடிச்சால்– ஷெல்லே, நான்
பதுங்குகுழியில் சரணாவேன்
மலையே நீயே மண்சரிவாய்ப் போனால்
பெற்றதாயே, நீ எனை விழுங்குவாய்,
பேய்பிசாசெனப் பிறர் நகைக்கப்
பேர்கெட்டுப் போவாயோ– என்
தாய்நிலமே, கொஞ்சம்
பொறம்மா கொதிக்காமல்!
சூடாறப் பால்சுமந்து பருக்கிவிடு தாயே!

மலைமகள் புலம்பல்

போகாதே போகாதே என் ராசா
பொல்லாத மண்சரிவு நடக்கக் கண்டேன்–ஐயோ
பொல்லாத மண்சரிவு நடக்கக் கண்டேன்
மலைமேடு மண்மேடாய் ஆகக்கண்டேன்–மனிசர்
மண்ணோடு மண்ணாக மாளக்கண்டேன்– ஐயோ
மண்ணோடு மண்ணாக மாளக்கண்டேன்

மலைக்கு மலைநடுவே– நாங்கள்
மண்ணுக்குள் புதைக்கிறோமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலைக்கு வைக்க அரிசியின்றி– ஐயோ
உழைத்துழைத்து மாய்கிறோமே
பிழைக்கக் காணி பூமியின்றி– நாங்கள்
பேயராய்த் திரிகிறோமே
உழைத்தும் வீடு வாசலின்றி–ஐயோ
ஊரூராய் அலைகிறோமே!

*** *** ***

மலைமகள் புலம்பல் மலையெங்கும் ஒலிக்க
கலை இலக்கியப் பேரவை நடாத்தும்
கைலாசபதி அரங்கில்
மலையே உன் தலைநிமிர்கவெனக்
காணிநிலம் வேண்டி
கவிகள் பொழிந்தனர்– தொழிலாளர்
காதுகள் நிறைய– கரங்கள் உயர!

'இந்த மண்ணில் துண்டு நிலம் வேணும்' என
நொந்த வாழ்வைக் குடைந்து
லுணுகலை சிறீ பொழிந்தனள் கவி மழை
'புத்தக வார்த்தைகள் பொய்யாகிப் போயினவோ
சனி மாறினால் இந்தச் சங்கடங்கள் மாளுமோ
இனி எட்டில் சனி எப்படி இருக்குமோ...'
சனவரி எட்டிலே சரிவரோ அரசரென்று
சாற்றினார் கவிச்சரம்.

மலைக்கவி 'என் தொழில் கவி'யெனும்
மல்லிகை சி. குமார்
நீலமாய் பச்சையாய் நிறம்மாறும்
மயில் நீங்கி– ஆறுமுகனே
கருணை கொண்டேனும் ஒரு
காணித்துண்டு கொடு...' என்றழுது
பரவசமானார்
பக்தி சுரக்கப் பாமாலை.

'லயத்தில் வயித்தது போதும்
லயம் கொண்டு பயமின்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமதரும கீதம் பாடுவோம்'– என்றோதி
லெட்சுமணன் வயித்தனன் கவிபாடி.

'சூதுவிளையாட விடுதி வைக்க வந்தால்
நிலம் ஏக்கராய்க் கொடுப்பார்'
'புலிப் பூச்சாண்டி காட்டி– இராணுவ
வேலியமைத்துக் காணிகள் பறிப்பார்...'
'கடல் நிரப்பிடவா கேட்டோம்
கால் வைக்க நிலம் கேட்டோம்
வசிக்கவோர் வீடு கேட்டோம்'

மயூரன் எனும் மதுரகவி
பாட்டாளி துயர் நொந்து
தோய்ந்தான் கவிகளில் வெந்து'

'நாணெறியும் சந்தாவில் வாழ்பவனே'
இருநூறு ஆண்டுகளாய் உழைத்தார்க்கு
இருபது பேர்ச் கேட்டால்
'ஏழு போதும்' என்கிறாய்
'எழு' 'போ' என்கிறாய்
'கொஞ்சம் பொறு
எழுவோம் நாம் இனி என
முழங்கினன் மாக்ஸ் பிரபாகர் எனும்
மறக் கவி.

'சொல்லவல்ல
வெல்லுஞ் செயல் வேண்டும்;
'மண்வெட்டி எடுத்து
மலை நோக்கி நாமெழுவோம்;
'அரிவாள் சம்மட்டிகொண்டு
அறிவால் வெல்வோம் நிலம்– நம்
காணிநிலம்'.
செம்மலர் மோகன் எனுஞ்
செஞ்சொற் கவியவன்
சத்தமாய் முழங்கினான் கவி.

நிமிர்ந்து நடந்து அரங்கில் ஏறிச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொரிந்தனன் ராகலை பன்னீர் கவி
'சுரண்டலால் தான் மக்கள்
சுருண்டு கிடக்கிறார்கள்'

'எம் மண்ணில்
புல்லினும் கீழாய் நாம்
புரியப்பட்டிருக்கிறோம்'

'கூலி உயர்வும்
குடியிருக்க வீடுந்தான் நாம்
கேட்கிறோம்'
'தனிவீடு கேட்டு
தகராறுகள் செய்வர் மக்கள்
மலைகள் குலுங்கும்'
'எதிர்த்து நொருக்கி எழுதல் அடிமைகள் கடன்
ஆம் அது எம் கடன்'
புதிய தலைமுறைப் பன்னீர் பொங்கினன்
குன்றத்தின் குமுறல் குரலில் தெறிக்கிறது

ஆர்ப்பரித்தார் ஆட்களெல்லாம்
ஆர் பறிப்பார் எங்கள் நிலமென்று
போர் முரசறைந்தார்
போதும் போதுமினிப் பொறுமை
பூமி பிளந்திட முன்பாய்ந்தார்
படை நடந்திடச் சூழ்ந்தார்
ஆமி வந்தாலென்-- ஆறுமுகச்
சாமி வந்தாலென்?
தேரானார் தொழிலாளர்
ஓடலானார் தோட்டத்துரை எங்கோ!
ஆழிசூழ் உலகெலாம்
ஆஹா ஆஹா என்றெழுந்து
ஆடினர் பாடினர் ஆனந்தக்கூத்து.

குறிப்பு
2014.12.27ல் கொட்டகலையில் தேசிய கலை இலக்கியப் பேரவையின் கைலாசபதி அரங்கில் இடம்பெற்ற தலைமைக் கவியரங்கத் தொகுப்பு
தாயகம் ஏப்ரல்–யூன் 2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08

## யாழ்ப்பாண மாப்பிளையே!

யாழ்ப்பாணம் ஏன்
மல்லாந்து கிடக்கிறது
முழி பிதுங்கியபடி!
மாப்பிளைக் கோலத்தில்
சரிகை வேட்டியும்
தலைப்பாகை கையுமாய்
கூப்பிடுங்கோவன் ஆரையன் ஒருக்காக்
கோவியாதேங்கோ கொஞ்சம்
சுறுக்காய்
வெறியுமில்லை
ஆளிலை அந்தக் குணமுமில்லை
பிறகேன் இப்படி!

வேப்பிலை அடிச்சால்
சரிப்பட்டு வருமோ
சரியாய்த் தெரியாது!
மல்லாந்து கிடக்குதே யாழ்ப்பாணம்!
இப்பிடியின்னுமேன்
பல்லு செருமினபடி!
மூக்கிலும் வாயிலும் நுரைதள்ள
முந்தின முறுக்கு மீசை
'கிளீன் சேவ்'விலை ஏன் போச்சு?

மீசாலை மிருசுவில் கொடிகாமம்
சாவகச்சேரி மட்டுவில் நுணாவில்
நாவற்குளி கைதடி யெனத் தென்மராட்சித்
தாடையெலும்பு தாக்குண்டு
தறுக்கணிச்சுப் போச்சு
நாக்கையும் மிஞ்சின நாலைஞ்சு
பல்லையுந்தேடி நல்லாய்க்
களைச்சுப் போனன்
எல்லாரும் தயவுசெய்து வாருங்கோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருக்காற் பொறுமையாய் பாருங்கோ'
என்ன இது எண்டு!

யாழ்ப்பாண மாப்பிளை
இன்னுமென்ன மல்லாந்து
கிடக்குது முளிசனபடி!

பதினைஞ்சு வருஷம் கழிச்சு ஊருக்கு வந்த
பெரியப்பா கொஞ்சம் நாடியைப் பார்த்தார்
இரத்த ஓட்டம் இடைக்கிடை இப்ப
தடைப்படுகுது கவனம்' என்றார்
'மூச்சும் சுகமாய் எடுக்க ஏலாது' என்றார்
இனியென்ன,

சுகம் விசாரிச்சு வாறவை இன்னும்
எத்தனை நாளோ? எத்தனை சனமோ?
கொலஸ்ரோல்– கொழுப்புக் கூடினபடியால்
ஏநைன் பாதை இரத்தகுழாய் இப்படியாத்தான்
அடைச்சுக் கிடந்தது?
கொழுப்புக் கரையக் குடுத்த மருந்திலை
ஏநையின் இப்ப முதுகு வளைச்சுப்
பகல் பொழுதிலை கொஞ்சம் குந்தி இருக்கு
அஞ்சரை யெண்டதும் பக்கவாதம் இழுத்து
படுத்துவிடுகுது!

ஆராரோ ஆரிவரோ
கண்ணூறு பட்டுதையோ?
ஆராரோ, குடி முடிப்பார்
நாவூறு பண்ணிப் போட்டார்?
ஊராரோ உறவாரோ எல்லாந்தான் போய்க்கெடவே
'ஹை செக்குறுட்டி ஷோன்' என்றே
மொழிந்தாரே மந்திரமாய்!
ஆராரோ... ஆரெவரோ
கண்ணூறு பட்டதையோ?

'ப[illegible]ப பக்கம் பாராதே– குளிக்கக்
கீரிமலை நினையாதே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கும்பிட மாவிட்ட புரந்தானேன்!*
*வெளிக்கிட்டு உலாத்தும் வேதனையோ*
*பல்லி சொல்லுது பறையாதே*
*போய்ப்படு ஒன்றும் பேசாமல்!!*

*'அது என்ன? ஏணைநிலை ஏறுவது என்ன?*
*சேலைனோ பிளட்டோ?*
*ஏதோ, கடவுளே,*
*எங்கடை யாழ்ப்பாண மாப்பிளை*
*கண் முளிச்சாக் காணும்?'*

தாயகம் ஜூன் 2003
(கவிஞர் இ. முருகையன் தலைமையில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடந்த கவியரங்கில் வாசிக்கப்பட்ட கவிதையின் சிறு பகுதி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09

## நீலம்பாரிச்சபடி இலங்கைத்தீவு...

நீலம் பாரிச்சபடி இலங்கைத் தீவு
நீளமாய்ப் பிணமாய் மிதக்கிறது
இந்துமா சமுத்திரத்தில்
பிணமானால் பிறகென்ன,
கொள்ளி வைக்கும் உரிமை எவர்க்கென்றார்
கொழுவல் மீளத் தொடங்கியது

இந்தியரோ நாம் இந்துவென்றார்
தொப்புள் கொடி உறவென்றார்
புத்தரைத் தந்தவரே தாமெனப் புகழுரைத்தார்
இலங்கையை எரித்த அனுமனை ஏவிய
இராமர் தாமென்றார்;
எரிபொருள் நிலையம் தமக்கே யென்றார்
எல்லாம் பெற்றார்;
கொள்ளி வைத்தல் தங்கள் குலக்கடனென்றார்

நீலம் பாரிச்சபடி இலங்கைத்தீவு
நீளமாய் பிணமாய் மிதக்கிறது
இந்துமா சமுத்திரத்தில்.

அமெரிக்க மிஷனெல்லாம்
ஆக்கியவர் தாமென்றார்
அள்ளி வைக்க வாய்க்கரிசி போடல் தங்கடனென்றார்
அபிலாஷ் குழந்தையை அழைத்து மகிழ்ந்தார்
ஆஹா கருணையென வாயைப் பிளந்தோம்
பயங்கர வாதிகளென்பார் முன்னே
ஜனநாயகம் திகழும் பின்னேயென்பார்
தனியரசிங்கே விளங்குது என்பார்
தத்தகிட தத்தகிட தகிங்கிணத் தோம் என்பார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீலம் பாரிச்சபடி இலங்கைத்தீவு
நீளமாய் பிணமாய் மிதக்கிறது
இந்துமா சமுத்திரத்தில்

கடலில் ஜப்பான் சாம்பல்
கரைக்க வேண்டுமாம்
வானில் ஆரெவரோ சாம்பல்
தூவ வேண்டுமாம்
பிதுர்கடன் செய்வதற்காய்
வல்லரசார் விஸ்தரிப்பார் எல்லாரும்
ஒன்றாய் சாவீடுவந்தார் வலைவிரித்து.

இலங்கை மாதாவின் குழந்தைகள் மடிந்தார்
வலிகாமம் வடக்கு கீரிமலையும் துடக்கானது
பலிக்கடாக்களானோம் பழிக்குப்பழி தீர்த்தோம்
தனித்தனித் தீவுச் சங்கதிகளாய்
சந்திகள் சிரிக்கச் சலித்தே போனோம்
வருத்தமெனில்
அப்பலோ எங்களுக்கு அப்பன் வீடானது
நவலோகா எங்கள்
நட்சத்திரக் கோட்டலாய் போனது.

காசு காசு காசு என்றே
இப்ப காகம் கரைகிறதாம்
சேவல் கூவாது ஆலயமணி கேட்காது
கூவும் தொலைபேசி பாடும்
ஆடும் தொலைக்காட்சி
குளறும் வானொலி
எழும்பும் குழந்தை
வண்டிலும் மாடும் நூதனமாகும்
உழவும் தொழிலும் இல்லாது போகும்
காசு கல்வி ஆகும்
காசு கரியாக உடல் சுகமாகும்
மண்ணே காசை அண்ணாந்து பார்க்கும்
மானம் காசில் வேகும்
காசில் உறவு மலரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசில் அன்பு விளையும்
சேவை என்ஜிஓ ஆகும்
இதயம் காசில் கரையும்
சுவாசம் கணனி ஆகும்
பூக்கள் பிளாஸ்ரிக் மணக்கும்
மொத்தமாய் மனிசம் சாகும்

மறுகொலனித்துவக் காண்டமீதில்
மனிசரெலாம் இரத்தமாய் உறைவர்
தசைக் கொழுப்பால் விறைப்பர்
எலும்பும் பாறையாய் இறுகுவர்
இனசனமெலாம் இப்படியே
கூட்டங்கூட்டமாய்
இயந்திர மாந்தராய்
அமெரிக்க றோபோக்களாய்
யப்பானின் யமகாக்களாய்
கொண்டாக்களாய்
மரத்தே போனார்
எல்லாம் மறந்தே போனார்.

தாயகம், டிசம்பர் 2005

(சாவகச்சேரி றிபேக் கல்லூரிக் கவியரங்கில் வாசிக்கப்பட்ட கவிதையின் ஓர் பகுதி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10

# துயரப் பாக்களும் உயரப் பாவும்

துயரப்பா-1 வயோதிபம்

இந்த வயதிலையும் இழுபடப்படாது இப்படியெல்லாம்
எந்தெந்தத் தேசமெல்லாம் நாங்கள்
நொந்து பெத்த எங்கடை பெட்டைப் பிஞ்சுகளை
வலிந்து பலி குடுத்த பாவிகளாய் வீட்டுக்
குந்திலை தனிச்சுப் போனம்பிள்ளை
இந்தவிதமாய் இன்னும் எம்மால் இழுபட ஏலாது குஞ்சு.

துயரப்பா-2 விதவைத் தாய்

கட்டின புரியன் போய் கனகாலமாச்சு
கண்ட நிண்ட ஆம்பிளையளும் கேக்கிறாங்கள்
கண்டபடி
மூண்டு பெட்டைக் குஞ்சுகளோடை
முளிசாட்டமாய் அலையிறன்
வயித்திலை நெருப்பை கட்டி வைச்சுக்கொண்டு
உயிரோடை உலாவுறன் ஆரிட்டைச் சொல்லியழ?

துயரப்பா -3 பெற்றோர்

இந்த நாளையான் கண்டறியா ரியூசனுக்கு
காசையெங்கை நான் கட்டிக்கொண்டு வாறது
பிள்ளையளைப் படிப்பிக்க நானெங்கை போறது?
உள்ளதைச் சொன்னாலென்ன, உண்ணாணை ஆச்சி
சரசுவதித் தாயே, உன்னைவிட்டால் எனக்காரம்மா கதி!

துயரப்பா-4 விழிப்புலன் இழந்தோர்

அம்பிட்டுப்போனன் வன்னிக்குப் போன இடத்திலை
சும்மா கண்டபடி தெறிச்ச ஷெல்லாலை
வம்பாய் போச்சுதையா! கண்ணிரண்டும் போச்சு
பிரப்பங் கதிரை பின்னிப் பிழைக்கிறன்
ஆரிப்ப வருகினம்? கதிரையெல்லாமிப்ப பிளாஸ்ரிக்காப் போச்சு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரிப்ப வருகினம் கதிரைபின்னத் தேடியென்னை
ஒரேயொரு கவலை, ஆரும் அருகிலை
ஊர்ச்சொந்தங்கள் கண்டாலும் கவனியாமல் போகினம்
பேருக்கெண்டாலும் 'எப்படிச் சுகம்' எண்டு
ஒரு சொல்லுக் கேட்டாலென்ன!

துயரப்பா– 5 காலிழந்தோர்

சைக்கிள்ளை வேலியோரமாய் போன என்னை
ஹைவேக் காப்பெற் றோட்டிலை தட்டிவிட்டான்
லொறிக்காரன், கால் ரண்டும் களட்டியாச்சுது
கையிரண்டும் மூளையும் கவனமாயிருக்குது
மெய்யாய் மனிசனாய் உழைக்க விரும்புறன் வயிறு கழுவ
உய்யவழி ஆரும் சொல்லுங்கோவன்.

துயரப்பா –6 அநாதைப் பிள்ளைகள்

அம்மாவும் இல்லை, அப்பாவுமில்லை
ஆரன் சொந்தக்காரர் அப்பப்ப சொல்லுற வீடுகள் தேடி
ஊரிலை அலையிறன் 'பெறுக்கித்தின்னி' யெண்டு
பிறரெல்லாம் பழிக்கினம், வேறென்ன நான் செய்ய!
சிறுபிள்ளை நான், சோறு வேணுமெனக்கு வயிறாரவுண்ண
கிறுக்கிப் படிக்கக் கொப்பி புத்தகம் வேணும்
வறுமையைப் போக்க நானென்ன செய்ய?

துயரப்பா –7 முதுகன்னியர்

சிவப்பு கறுப்பு வெள்ளை யெனச் சாதிசனம் சோதித்து
நாள் கோள் கோத்திரம் சாத்திரம் பார்த்து
சீதனமும் சேர்த்து சீரழிஞ்சு போனன்
நாற்பது வயதாச்சு நான் தனிச்சுப்போனன்
கோபியர் கொஞ்சும் ரமணா, கண்ணா
பெண் கேட்டு என்னை ஆர் தேடி வருகினம்?
கலியாணம் கட்ட இன்னுமேன் காதலுக்குத் தடை?

துயரப்பா –8 நோயாளர்

நஞ்சற்ற மரக்கறி ஆரிட்டை வேண்ட?
ஆரோக்கிய உணவுக்கு நானெங்கை போக
கான்சர் பிளட் பிறசர், கொலஸ்ரோல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டயபிற்றிஸ் சோதரர்கள் என் உடன்பிறப்பாய்
உதிரத்தின் உதிரங்களாய் ஆன எங்களை
உலகமய ஊத்தை யெல்லாம்
உற்பத்தி உதவி கடன் எண்டு
வேரோடை எங்களை வெட்டிச் சரிக்கினை

துயரப்பா – 9 நிலமற்றோர்

குந்த நிலமில்லை– குடியிருக்க குடிலில்லை
வெந்த எங்கள் சீவியத்தில் எல்லாம் விளலாச்சு

துயரப்பா – 10 பிரயாணிகள்

பஸ்ஸில் பயணம் பெருந் தண்டனையாச்சிது
எச்சில் இலைகளாய் எள்ளல், கிண்டல், நக்கல்
பச்சைத் தமிழ் யாழ்ப்பாணத்தில் ஓட்டோவுக்கு மீற்றரில்லை
பிச்சைக்காசு நூறு ஆகக் குறைஞ்சது.

துயர்– 11 விவசாயியும் நுகர்வோரும்

ஆக்கினையாய்ப் போச்சு
ஆரிட்டைச் சொல்லியழ
என்ரை வளவிலை வைச்சதை
என்ரை வயலிலை விளைஞ்சதை
என்ரை மரத்திலை கனிஞ்சதை
என்ரை கிணத்துத் தண்ணியை
குடிக்க விதியில்லை

ஆரோ எவரோ
ஆக்கினையோ எங்களையோ
ஆருக்கோ ஆரோ செய்ததை

எங்கடை வளவிலை வைச்சதை பிடுங்கவேணும்
எங்கடை வயலிலை விளைஞ்சதை அறுக்கவேணும்
எங்கடை மரத்திலை கனிஞ்சதை தின்னவேணும்
எங்கடை கிணத்துத் தண்ணியை
அள்ளி அள்ளிக் குடிக்க வேணும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயரப் பா

1. உழைப்பாளர்

மழை நீரை தேக்குவம்
அளைந்து பழகிச் சிரிச்சுப் பேசுவம்
ஆளையாள் அளைந்து ஆனந்தப் பரசவம் பெறுவோம்
ஊரெல்லாம் கூடுவம்
ஆளுக்குப் பத்து ஊருக்கு நூறு என
அணியாய்த் திரள்வோம்
ஊரெல்லாம் கூடுவம்
ஆடுவம் பாடுவம்
ஆனந்தக் கூத்திடுவம்

'உழைப்பவர்' நாம் என உரத்துக் கூறுவம்
வாரும் மக்காள்!
தேரேறி வரும் தேர்தலை விரட்டுவம்
மரமேறி உரமேறி உழைப்பாளர் கூடுவம்
வாரும் மக்காள்!
வீரம் செறிந்த செம்மண்ணில்
உரம் எங்கள் தோழ் உண்டு
கரம் ஒன்றாய் சேர்ப்பம்
ஆற்றல் மிகு கரங்கள்
ஆயிரம் பல்லாயிரமாய் உயரும்

கறுப்பு மீசை, நிமிர்ந்த நெஞ்சுத் தலைவா
உன்னுறுப்பு எங்கள் உயிர்ப்பு
என்னருமை இளங்கவிகாள்
இனியென்ன துயர்!
அழுதென்ன பயன்
நாமே பெறுவோம்
பல்கி ஒன்றிணைந்து சுதந்திரமாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிற்க அதற்குத் தக

## கவியரங்கக் கவிதைகள்



978-624-93177-2-7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org